செ.வெ.எண் -43 நாள்: 22.05.2018

# அரியலூர் மாவட்ட வனத்துறையின் சார்பில் உலக உயிர்பன்மை தின விழா கொண்டாடப்பட்டது.

அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வனத்துறையின் சார்வில் உலக உயிர்பன்மை தின விழா மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (22.05.2018) நடைபெற்றது.

**இவ்விழாவில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

உயிர்பன்மை என்பது பூமியில் வாழும் பல்வகையான தாவரங்களையும், வன உயிரினங்களையும் குறிக்கும். ஒவ்வொரு ஆண்டும் மே 22ஆம் தேதி உலக உயிர்பன்மை தினமாக தமிழ்நாடு வனத்துறை மூலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்விழாவில் முக்கிய நோக்கமே தாவரங்களையும், வன உயிரினங்களையும் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு இவ்விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு வனத்துறையின் உயிர்பன்மை பாதுகாக்கும் பொருட்டு, தமிழ்நாடு பல்லுயிர் பெருக்கம் மற்றும் பசுமையாக்குதல் திட்டம் மூலமாக விவசாயிகளின் நிலங்களில் இலவசமாக மரக்கன்றுகள் வனத்துறையின் மூலம் நடவு செய்யப்பட்டு, மரக்கன்றுகள் வளர்த்த விவசாயிகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு பின் ஊக்கத்தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

ஆகையால், ஒவ்வொருவரும் இயற்கையை நேசித்து, பூமியிலுள்ள உயிரினங்களை பாதுகாத்து, நமது வருங்கால சந்ததியினருக்கு நல்ல சுற்றுச்சூழலை கிடைக்க வழிசெய்திட வேண்டும். **மரம் மனிதனுக்கு கிடைத்த மகத்தான வரம். ஆகையால், இதுவரை அறம் செய்தோம், இனி ஒரு மரம் செய்வோம்.**

எனவே, மனித குலத்தை காக்கும் பொருட்டு, எதிர்வரும் சந்ததியினர் நலன் காக்கவும், மாணவ, மாணவியர்கள் தங்களது பிறந்த நாளிகளிலும், பெற்றோர்கள் தங்களது திருமண நாளிலும் ஒவ்வொரு மரக்கன்றுகள் நட்டு, வளர்த்து, பராமரித்து பூலோகத்தை பாதுகாத்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

முன்னதாக, வனங்கள் குறித்த போச்சுப்போட்டி, மற்றும் கட்டுரைப்போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற அரசு தொழிற்பயிற்சி மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்கள்.

இவ்விழாவில், மாவட்ட திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) ஜி.கே.லோகேஷ்வரி, அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் நா.சத்தியநாராயணன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) க.பழனிசாமி, அரியலூர் அரசு தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் இராதாகிருஷ்ணன், வட்டாட்சியர் சு.முத்துலெட்சுமி மற்றும் அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

இவ்விழாவில், முன்னதாக மாவட்ட வன அலுவலர் ஏ.எஸ்.மோகன்ராம் அனைவரையும் வரவேற்றார். முடிவில், வனச்சரகர் கணேசன் நன்றியுரையாற்றினார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**